**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108514

1. District : Coimbatore மாவட்டம் PS: Vigilance and Anti Corruption காவல்நிலையம் Year: ஆண்டு FIR No.: முத.அ. எண் 21/2021/AC/CB Date: நாள் 21.09.2021 11.00 hrs

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 14.09.2021 at about Date to : நாள் வரை 20.09.2021 at about 09.45 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 13.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.09.2021 Time நேரம் : 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.09.2021 Time நேரம் : 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil written in hand

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் about 8 KM south east direction
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Commercial Tax office Avarampalayam circle, Coimbatore Balasundaram Road
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Mahalakshmi (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Madana Gopal
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 41 year (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி RMG Enterprises, 436, mettupalayam Road, opposite to Annapoorna Hotel vadavalli covai, Coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Vivekanandan Commercial Tax officer, Avarampalayam circle, Balasundaram Road, Pappanaicken palayam Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Delay due to complainant

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.13(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

enclosed separate sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Mohan 21/09/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
21/9/2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 21/9/2021

Name: பெயர் M. Vijayalakshmi
Rank: நிலை......................No. எண் ..........
Inspector Nadu Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

சமர்ப்பிக்கப்படுகிறது:

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.21/2021/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

21.09.2021-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 09.00 மணிக்கு காவல் ஆய்வாளர் M.விஜயலட்சுமி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர், கதவு எண்.436, மேட்டுப்பாளையம் ரோட்டில், RMG எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தை நடத்திவரும் மதனகோபால் என்பவரது மனைவி M.மகாலட்சுமி, வயது 41 என்பவர் கோவை ஊ.த.க. அலுவலகம் ஆஜராகி தமிழில் எழுதியிருந்த எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோவை ஆவாராம்பாளையம் வட்டார கமர்சியல் டேக்ஸ் ஆபிசர் திரு.விவேகானந்தன் என்பவர் புகார்தாரரின் நிறுவனத்தில் கொள்முதல் செய்ததற்கான வரிகளை சரியாக செலுத்தவில்லை என்றும் 2014-2015-ஆம் வருடாந்திர கணக்கை மறைத்து தாக்கல் செய்து விட்டதாகவும் அதற்கு அபராத தொகை விதிப்பது சம்பந்தமாக உத்தரவு போடாமல் இருக்க லஞ்சமாக பணம் கேட்டது தெரியவந்தது. புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 21.09.2021-ம் தேதி காலை 11.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.21/2021/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of

Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரி திரு.விவேகானந்தன் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், M.மகாலட்சுமி, வயது 41, க/பெ.மதனகோபால், RMG எண்டர்பிரைசஸ் 436, மேட்டுப்பாளையம் ரோடு, அன்னபூர்னா ஹோட்டல் அருகில், வடகோவை, கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான் கோவை சாய்பாபா காலனியில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.Sc., வரை படித்துள்ளேன். நானும் என் கணவரும் மேற்கண்ட முகவரியில் R.M.G. எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் 2006 ம் ஆண்டு முதல் மர வியாபாரம் கோவை கணபதி மற்றும் வடகோவையில் செய்து வருகிறோம். மேற்படி R.M.G. எண்டர்பிரைசஸ் எனது கணவர் பெயரில் இயங்கி வருகிறது. அதன் CST No.857774 and TIN NO.33032223800 ஆகும். நாங்கள் முறைப்படி வருமான வரி மற்றும் விற்பனை வரியை செலுத்தி வருகிறோம். விற்பனை வரியை நாங்கள் கோவை ஆவாரம்பாளையம் வட்டத்தில் செலுத்தி வருகிறோம். என் கணவர் வியாபாரத்தை கவனித்து வருகிறார். நான் எங்கள் நிறுவனத்தின் வரவு செலவு கணக்கு மற்றும் Sales Tax செலுத்துவது சம்பந்தமான வேலைகளை கவனித்து வருகிறேன். கடந்த 02.09.2021-ம் தேதி மாலை சுமார் 6.40 மணிக்கு ஆவாராம்பாளையம் வட்டார கமர்சியல் டேக்ஸ் ஆபிசர் திரு.விவேகானந்தன் என்பவரிடம் உதவியாக இருந்து வரும் தனிநபர் திரு.குமார் அவர்கள் அவருடைய தொலைபேசி எண்.9994758254 என்ற எண்ணிலிருந்து என்னுடைய செல்போன் எண்.9489090999 க்கு அழைத்து ஆவாராம்பாளையம் கமர்சியல் டேக்ஸ் ஆபிசர் திரு.விவேகானந்தன் அவர்களை வந்து பார்க்குமாறு சொன்னார். எனக்கு கம்பெனி சம்பந்தப்பட்ட அவசர வேலையிருந்ததால் காலதாமதமாக நான் 14.09.2021 ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் கமர்சியல் டேக்ஸ் ஆபிசர் திரு.விவேகானந்தன் அவர்களை பாலசுந்தரம் ரோட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் நாங்கள் வரி செலுத்திய 2014-15 ம் ஆண்டுக்கான கணக்கில் Annexure-1A and P&L (profit loss) form WW பட்டியலில் Central sales tax purchase செய்ததில் ரூபாய்.21,33,703/-ஐ வருடாந்திர கணக்கில் மறைத்து விட்டதாகவும் அதற்கான

பெனால்டியாக தொகை ரூ.11,36,069/- வருவதாகவும் அது தவிர செக்போஸ்ட்டுகளில் பதிவான இரண்டு பில்கள் பில் எண்.8 நாள் 01.05.2014 மற்றும் பில் எண்.1110 நாள் 14.12.2014 ஆகிய இரண்டு பில்களின் தொகை ரூ.4,92,589/- களை வரி செலுத்திய பட்டியலில் காண்பிக்கவில்லை என்றும் அதற்கான வரி தொகை ரூ.1,74,849/- மற்றும் அதற்கான பெனால்டி ரூ.2,62,274/- கட்ட வேண்டும் என்று சொன்னார். நான் அந்த தொகையை கேட்டதும் பிரமித்து போய் சார் நாங்கள் Purchase Tax எல்லாம் சரியாகத்தான் கட்டியிருக்கிறோம். என்னங்க சார் இவ்வளவு தொகை சொல்றீங்க என்று கேட்டேன். அதற்கு அவர் நான் உங்களுக்கு சரிபண்ணி கொடுக்கிறேன், பெனால்டி கட்டாமல் இருக்க மேற்படி வரும் தொகை ரூ.15,73,192/-ல். 25% அதாவது ரூ.4,00,000/-ம் எனக்கு தனியாக தந்தால் மேற்படி தொகைகளை செலுத்த அறிவுறுத்தாமல் அப்படியே விட்டு விடுகிறேன் என்று சொல்லி, இது சம்மந்தமாக அவர் தயார் செய்த கணக்கீட்டு பட்டியலை என்னிடம் கொடுத்தார். அதற்கு நான் சார் என்ன இவ்வளவு பணம் கேட்கறீங்கள் என்று சொல்லி, நான் எங்கள் ஆடிட்டரிடம் கொடுத்து கணக்கு சரி பார்த்து விட்டு, எனது கணவரிடம் கேட்டு வருவதாக சொல்லி வந்து விட்டேன். நான் அன்றைய தினமே மாலை சுமார் 5½ மணிக்கு எனது ஆடிட்டரிடம் சென்று திரு.விவேகானந்தன் அவர்கள் கொடுத்த பட்டியலை கொடுத்து அவரிடம் விவரத்தை சொன்னேன். ஆடிட்டர் எங்களுடைய கணக்குகளை சரி பார்த்து வைப்பதாகவும், 16.09.2021 அன்று வருமாறு கூறினார். நானும் 16.09.2021 ம் தேதி ஆடிட்டரை சந்தித்த போது அவர் எங்களுடைய 2014- 2015 க்கான கணக்குகளை சரி பார்த்து விட்டதாகவும் மாதாந்திர கணக்குகளுக்கான வரிகள் முறைப்படி செலுத்தியுள்ளதாகவும், வருடாந்திர (form WW) பட்டியல் சமர்ப்பிக்கும்போது டோட்டலில் ரூ.17,82,541/- மட்டுமே விடுபட்டுள்ளது என்று கூறிவிட்டு அதற்கு revised statement தாக்கல் செய்து கொள்ளலாம் என்றும் இதனால் அரசுக்கு எந்த வரி இழப்பும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் செக்போஸ்டில் பதிவான இரண்டு பில்கள் பில் எண் 8 நாள் 01.0.5.2014 மற்றும் பில் எண் 1110 நாள் 14.12.2014 ஆகிய இரண்டு பில்களுக்கு வரி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கான ரசீதுகள் உள்ளதாகவும் கூறினார். பின்னர் நான் அதே நாள் 16.09.2021 ம் தேதி மாலை

சுமார் 6 மணியளவில் கமர்சியல் டேக்ஸ் ஆபிசர் திரு.விவேகானந்தன் அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்து அவரிடம் எனது ஆடிட்டர் சொன்ன விவரத்தை சொல்லி எங்கள் மீது எந்த தவறும் இல்லை revised statement தாக்கல் செய்து கொள்கிறோம் என்று சொன்னேன். அதற்கு அவர் revised statement கொடுத்தாலும் நான் Penalty போட்டுத்தான் ஆவேன் என்று கராராக சொன்னார். நான் அவரிடம் சார் தற்போது பிசினஸ் சரியாக இல்லை என்று சொன்னபோது அதற்கு அவர் சரி, சரி ரூ.2,50,000/- கொடுங்கள் நான் உங்களுக்கு penalty இல்லாமல் பார்த்து கொள்கிறேன் என்று சொன்னார். நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னால் கொடுக்க முடியாது என்றும் பணத்தை குறைத்துக் கொள்ளும் படி கேட்டேன். அதற்கு அவர் பணமெல்லாம் குறைக்க முடியாது நான் கேட்ட பணம் ரூ.2,50,000/- கொடுத்து விட்டு என்னிடமுள்ள பேப்பர்களை வாங்கி சென்று விடுங்கள் இல்லையென்றால் மொத்த தொகை ரூ.15,73,192/- ஐ கட்ட சொல்லி ஆர்டர் போட்டு விடுவேன் என்று மிரட்டினார். நான் அவரிடம் எனது கணவரிடம் மறுபடியும் கலந்து பேசி விட்டு வருகிறேன் என்று புறப்பட்டபோது அவர் என்னிடம் அவரது செல் போன் எண்.9894755222 ஐ கொடுத்து கணவரிடம் பேசிவிட்டு போன் செய்ய சொன்னார். நான் சரியென்று சொல்லி வந்து விட்டேன். திரு.விவேகானந்தன் அவர்கள் என்னை போன் செய்ய சொன்னதால் நான் 18.09.2021 ம் தேதி காலை சுமார் 9.40 மணிக்கு நான் எனது செல் போனிலிருந்து அவரை தொடர்புகொண்ட போது அவர் எனது அழைப்பை ஏற்றுகொள்ளவில்லை. பின்னர் 10 நிமிடம் கழித்து அவரே எனது செல் போன் எண் 9489090999 க்கு தொடர்பு கொண்டு பேசினார். அப்போது நான் அவரிடம் எங்கள் சார்பாக எந்த தவறும் இல்லை நாங்கள் வெளியில் விசாரித்த போது penalty வராது என்று சொல்லுகிறார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் penalty எல்லாம் போட முடியும் பணம் ரெடி பண்ணிட்டீங்களா என்று கேட்டார். அதற்கு நான் சார் என்னால் 2,50,000/-இந்த கொரோனாகாலத்தில் வியாபாரம் மந்தமாக உள்ளதால் கொடுக்க முடியாது என்றும், கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்க அதற்கு அவர் தான் கேட்ட பணத்தை குறைக்க முடியாது என்று கறாராக சொல்லி அன்றைய தினமே பணத்தை கொடுக்க சொன்னார். அதற்கு நான் சரிங்க சார் பணம் ஏற்பாடு

செய்கிறேன் என்று சொன்னவுடன், அவர் சரி சாயந்திரம் கூப்பிடுங்கள் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். அன்றைய தினம் சுமார் இரவு 8.15 மணிக்கு நான் திரு.விவேகானந்தன் அவர்களை போனில் தொடர்பு கொண்டு அவர் கேட்ட பணம் முழுமையாக ரெடியாகவில்லை என்று சொன்னபோது அதற்கு அவர் சரி அட்வான்சாக லஞ்சம் பணம் ரூ.1 லட்சம் திங்கள்கிழமை 20.9.2021 ம் தேதி என்னுடைய ஆபீஸுக்கு காலை 10.30 மணிக்கு மேல் கொண்டு வந்து கொடுங்கள் மீதி கொகையை இரண்டு நாள் கழித்து கொடுங்கள் என்று அறிவுறுத்தினார். பின்பு 20.9.2021 ம் தேதி திங்கட் கிழமை காலை சுமார் 9.45 மணிக்கு விவேகானந்தன் அவர்களிடம் உதவியாக இருந்து வரும் தனி நபர் குமார் எனக்கு போன் செய்து விவேகானந்தன் சார் பிசியாக இருப்பதாகவும் என்னை அலுவலகம் வர வேண்டாம் என்றும் மறு நாள் காலை செவ்வாய்கிழமை பணத்துடன் வரும் படி விவேகானந்தன் சார் கூறியதாக எனக்கு போன் செய்தார். நானும் என் கணவரும் யோசித்து பார்த்ததில் எங்கள் நிறுவனத்தின் சார்பாக எந்த தவறும் இல்லாத போதிலும் எங்களை பெனல்ட்டி கட்டவேண்டும் என்று பயமுறுத்தி பணம் கேட்கும் திரு.விவேகானந்தன் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே எங்கள் நிறுவனத்தில் 2014-15 ம் வருடாந்திர Central Sales Tax purchase Annexure IA and Profit and Loss பட்டியலில் ரூ.21,33,703-ஐ மறைத்து விட்டதாகவும் அது தவிர செக் போஸ்ட்டில் பதிவான இரண்டு பில்களில் தொகை ரூ.4,92,589/- ஐ வரி செலுத்திய பட்டியலில் காண்பிக்க வில்லை என்று மொத்த அபராத தொகை ரூ.15,73,192 ஐ விதிப்பது சம்பந்தமாக உத்திரவு போடாமல் இருக்க ரூ.2,50,000/-ம் கேட்டு அதில் அட்வான்சாக ரூ.1,00,000/-ஐ லஞ்சமாக பணம் கேட்கும் கமர்சியல் டேக்ஸ் ஆபிசர் திரு.விவேகானந்தன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் கமர்சியல் டேக்ஸ் ஆபிசர் திரு.விவேகானந்தன் என்னிடம் நான் வரி செலுத்திய 2014-15 ம் ஆண்டுக்கான கணக்கின் Annexure-1A and P&L (profit loss) form WW கொடுத்த பட்டியலை இணைத்துள்ளேன். இப்படிக்கு, sd.XXXX 21.09.2021(M.Mahalakshmi). Sir, Received the complaint on 21.09.2021 at about 09.00hrs. sd.XXXX, 21.09.2021 (M. Vijayalakshmi) Inspr, V&AC, Cbe. Sir, After.

conducting discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.21/2021/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 21.09.2021 at about 11.00 hrs. sd.XXXX, 21.09.2021 (M. Vijayalakshmi) Inspr, V&AC, Cbe. முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு மற்றும் கமர்சியல் டேக்ஸ் ஆபிசர் திரு.விவேகானந்தன் அவர்கள் வாதியிடம் கொடுத்த Annexure-1A and P&L (Profit and loss) form WW விபரம் அடங்கிய கணக்கீட்டு பட்டியல் இத்துடன் இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

(M.விஜயலட்சுமி),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு,
கோயம்புத்தூர்.